T-UN-680



# அங்காளம்மன் &
# சோளீஸ்வரன்
# பதிகங்கள்.

இயற்றியது:
ஊஞ்சலூர் வித்துவான் அந்தகக்கவி
பழனியப்ப செட்டியார்.

---

கரூர் மளிகை,
கு. ஆ. பள. மருதமுத்து செட்டியார்
முயற்சியால் முதற்பதிப்பாக வெளியிடப்
பட்டது 1933-ல்.

# அங்காளம்மன் பதிகம்.

## விநாயகர் துதி

மலையதுக்கரசனீன்ற மாதங்குத்தாய் மேற்பாட
மலையதைக் குடைப்பிடித்த மாயவன் மருகன்வேலால்
மலையதைத் துளைத்தவாறு மாமுகன்றனக்கு மூத்த
மலையதிற் கவிவரைந்த மகாகணபதி தாள் காப்பு.

## அங்காளம்மன் துதி.

விதிமுறை நீதிநான்கு வேதமுங் கற்ற இந்த
பதி யிருபத்தினுலு பண்ணவர் முனிவர் மற்றோர்
துதிசெயும் படியாய்நஞ்சை சூழ்ந்திடும் வெங்கம்பூரில்
குதிகொண்ட வங்காளம்மா குழந்தையா னென்னை
யாள்வாய்

## நூல்.

1 நஞ்சுண்ட சங்கரன் பாண்டரங்கன் முருகன்
நாயகன் சித்தர் முத்தர்
நவக்கிரக உத்தமர் சுகப்பெருமை பெற்றவர்
நந்திமுனி நவவீரமும்
பஞ்சின் மெல்லடியார் வியாகிர்மபாதரும்
பதஞ்சலி முனிநாதரும்
பகர்வீரபத்திரன் மதுரைவீரப்பனும்
பரிமளக் காத்தபெருமான்
அஞ்சலி செய்பவரை காக்கும் கருப்பண்ண
னக்கரைப்பட்டி முத்து

ஆதிபொன் மாரிமுத் தம்மைபொன்காளிக்கு
மனைவர் திருக்கோவி லிடையில்
செஞ்சொற் புகழ்ந்திடும் காவேரியநுமநதி
சேர்ந்திலகு நத்தமேட்டில்
திருவேங்கை மானகரி லுறையங்காளம்மனே
தேவியருளா னந்தியே.

2 செந்தாமரைப்பூவு வெண்டாமறை மலர்ந்த
சிறந்தமந் தாரைமுல்லை
செண்பகம் கொன்றையும் பாரிசாதம் தும்பை
செந்தாழை யிருவாச்சியும்
நந்தாவனத்தழகு தேங்குமாஞ்சோலையும்
ரஸ்தாளி வாழைகமுகும்
நஞ்சை யெங்குஞ் செந்நெல் கதிரலங்காரமும்
நாற்றிசையில் நீர்ப்பாய்ச்சலும்
எந்தாய் திருக்கோவிற் சுற்றுமதில் வீதியு
மெழில்வண்டி ரயில்மார்க்கமும
இந்துக்கள் மனைகளும் மாடமுங் கூடமு
மெடுப்பான மெத்தைவீடும்
சிந்தாது சிதராது காவேரியநுமநதி
சேர்ந்திணங்கு நத்தமேட்டில்
திருவேங்கை மானகரி லுறையங்காளம்மனே
தேவியருளானந்தியே

3 நாயரன தண்டரறி யாதபரற்கேணியை
நானறிந்தமிர் தமுண்டு

ரசினையுங் கண்டுபசி தீர்த்திடுவனென்றது
நவின்றதைப்போல தீரர்
நோயாலழுந்திக் கிடக்கின்ற பேதையொரு
நொண்டியா ஞேசியாமல்
நுவலவரிதானவன் பாதார விந்தமதை
நோக்கியா னென்னேரமும்
தாயாரேயென்றேதியஞ்சலிசெய் தலைகிறேன்
தஞ்சமென்றுலும் மெத்த
தரித்திரத் தோசிக்கு எண்ணின துமுடியுமோ
தன்னைநொந் தென்ன நினது
சேயோடு வாதமா காவேரியநுமநதி
சேர்பவள நத்தமேட்டில்
திருவேங்கை மானகரி லுறையங்காளம்மனே
தேவியருளானந்தியே.

4 தேவாதிதேவர்மறை யாய்ந்தரிஷிமார்களும்
திவ்யகுண கவிராஜரும்
திரிகாலமுங்கண்ட பெரியோர்களானேர்
சிறப்புற்ற பேருமிந்த
கோவாளுகின்றவொரு ராஜர்மந்திரிகளும்
கூறுமந்தணர்க ளெல்லாம்
கும்பிட்டு வாழ்த்திடுநம் தெய்வமேயத்தனை
கூட்டத்தில் யாஞெருவனே
வாவே யெனக்கருள்நீ தாவேசிரஞ்சீவி
வாழ்வே பரஞ்சோதியே

மற்றுமொரு தெய்வங்க ளெந்தனைக்காப்ப
வசையுனக் கென்றறியையோ [தில்
தீவேழும் பாய்ந்திடும் காவேரியநுமநதி
சேர்ந்திலகு நத்தமேட்டில்
திருவேங்கை மானகரி லுறையங்காளம்மனே
தேவியருளானந்தியே.

5 பொன்னடிக ளிரண்டுமுடி வில்லாதமேலான
பொருளென் றெடுத்துமுடிமேல்
பொருந்தவைத் துந்தன்மீதிலே கவிதை
புகழ்ந்துகொண் டாடிநின் றும் [பாடிப்
இன்னமுங் கொடுமையாய் என்மீதில்வறுமை
இனிவைத் திருப்பதேனோ [தனை
ஈனப்பேயாடிடக் கூடநின் ருடினவ
ளென்றே ளிதம் சொன்னனோ
பன்னுஞ் சவக்குடலே மாலையாய்ப் பூண்பதும்
பட்சியிறகைத் தரித்ததும்
பணியக்கு மணிமண்டை யோட்டிலேற்றுண்
பரிகாசம் பேசினேனோ [டதை
சென்னையில் சேர்ந்தபதி காவேரியநுமநதி
சேர்ந்திலகு நத்தமேட்டில்
திருவேங்கைமானகரி லுறையங்காளம்மனே
தேவியருளானந்தியே

6 அறுநான்குநாட்டில் சிறப்புற்ற மேல்கரை
அரையனு டென்று புகழ்வார்

அண்டர்முனிவோர்களும் சித்தவித்யாதரரும்
அழகான பொன்னிநதியில்
இருவினை யொழித்திட நதியிற்குளிப்பது
மிருடிகள் தவம் செய்வதும்
ஏசாட்சரத்தையும் பீஜாட்சரத்தையு
மெழுதரிய வோங்காரத்தையும்
மறுஜெனன மில்லாமல் சாயுஜ்ய பதவியை
மனதினிற் தியானிப்பராம்
மாலயன் சங்கரன் பூமியிலிறங்கியே
வரந்தந்த பதியுமிதுவே
தெரிவையர்கள் நீராடும் காவேரியநுமநதி
சேர்பவள நத்தமேட்டில்
திருவேங்கை மாநகரி லுறையங்காளம்மனே
தேவியருளானந்தியே.

7 நோகாமல் நொந்துபுண் ணுகுதேயெப்போ
நோயா லழுந்தவசமோ [தும்
நொண்டிசப் பாணிசெவி டுமையும்விழியதின்
நோக்கமே சாடைகாட்டும்
சாகாத செத்தசவ மல்லவோ விழியற்ற
சடலமதை யானெடுத்தேன்
சண்டாள னென்றுபரி காசமாய்ப் பேசியே
தாரணியுளோர் சிரிக்க
மேகாது நின்மனது கோணினல் யானேதும்
மேடேற வழியில்லையே

வேறேயொரு தெய்வத்தை நாடவும்புத்தி
விஷமாகவே காணுதே [யது
சீர்கோமளத்திவலை காவேரியநுமநதி
சேர்பவள நத்தமேட்டில்
திருவேங்கைமானகரி லுறையங்காளம்மனே
தேவியருளானந்தியே.

8 எண்ணெழுகின்றித் தீவட்டி லைட்டெல்லா
மெரியுமுன் கிருபையாலே
ஏகவெளி விண்ணதில் விமானம் செலுத்திட
எண்ணிலுற் கைகூடுமே
தண்ணிடரை விரகின்றி பஞ்சகச்சாயமுஞ்
சாதமுஞ் செய்வாயம்மா
சமுத்திரத் தீரத்தி லங்கியதுபற்றியே
தணலா யெரிப்பாயம்மா
மண்ணுலக முழுவதும் பம்பரம்போலவே
வலமிடம் சுழலவைப்பாய்
மதலையென் வினைதீர்க்க வாகாதோவுன்னுலே
மனதுவைத் தென்னையாள்வாய்
திண்ணமுள ருசிகர காவேரியநுமநதி
சேர்பவள நத்தமேட்டில்
திருவேங்கை மானகரி லுறையங்காளம்மனே
தேவியருளானந்தியே.

9 உம்பர்பகை தீர்ந்திடத் தாருகாசூரனை
உடலைப்பிளந்த நீலி
உக்ரமுள மகிடனைச் சிரசைத் துணித்திடும்
உத்தண்ட செஞ்சடச்சி
பம்பையென் றலகையைக் கட்டிப்பிடித்துநீ
பரத சங்கீதமாகப்
பண்ணினவளெண்டிசையு மடிமையா யாட் [கொண்டு
பணியவைத்திட்ட கௌரி
வம்பரைப் புலையரைச் சிட்சையது செய்திடும்
மட்டடங்காத கோபி
மந்திரஞ் சூனிய மொடுபில்லிஜாலமும்
மாளவைத்திட்டதேவி
தெம்புதரு நற்புனல் காவேரியநுமநதி
சேர்பவள நத்தமேட்டில்
திருவேங்கை மானகரி லுறையங்காளம்மனே
தேவியருளானந்தியே.

10 பூரணனந்திதுடி யிடைமங்கை மாயையே
புரமூன் றெறித்த திருவே
புவனதிரி நேத்திரி நித்யகல்யாணியே
புண்டரீகப் புஜத்தி
காரணி பரம்பரி யபிராமியந்தரி
கங்கைமதி செஞ்சடச்சி
கபாலிதிரி சூலிமான் மழுவேந்துமாலியே
கனகசபை யம்பரத்தி

நாரணன் தங்கைபர மேஸ்வரி மனோன்மணி
நற்பாம் பலங்காரியே
நாடெங்கும் மெச்சிடும் விபூதி ருத்ராட்சியே
நம்பினவர் பங்கிலுறைவாய்
சேரணு கா தூறிடும் காவேரியநுமநதி
சேர்பவள நத்தமேட்டில்
திருவேங்கை மானசரி லுறையங்காளம்மனே
தேவியருளானந்தியே

11 தந்தைதா யுறவினர் கழனியகம் வேணுமோ
சாந்தமோ டறிவுகூர்மை
தர்மமொடு நீதிநெறி நல்லோர் தமைக்
தரிசனத் தீக்ஷைபெற்றுச் [கண்டு
செந்தமிழை யோதியும் பஞ்சாட்சரத்தாலே
திரேகமதை யோகநிலையில்
தினமவுனியாகவும் பூசிக்கவேணுமோ
திரிகால முனதுகருணை
மைந்தனென் மீதினில் கடைக்கண்ணை நோக்
வருமைநோய் பிணிகளுறுமோ [கிடில்
மகனையஞ்சாதெனக் கனவில்வந் துதவுவாய்
வாலைகமலாசனத்தி
சிந்துரம் போலிலகு காவேரியநுமநதி
சேர்ந்திலகு நத்தமேட்டில்
திருவேங்கைமானகரி லுறையங்காளம்மனே
தேவியருளானந்தியே

## அவையடக்கம்.

பச்சைமண் பாண்டத்தை தட்டியுங்கொட்
பாண்டுவாத்ய கோஷ்டமாய் [டியும்
பரதசங் கீதமென நடிப்பதைபோலவும்
பாலர் மணலைத்தள்ளியே
இச்சையொடு பெரியமனை யென்பதைப்
மிளைஞர்கல் யாணம்போலும் [போலவு
இரவில்பனி பொழியவும் தானியங்கொண்
ரேருழுத பாவனைபோல் [டொருவர்
தற்செயலா மென்மெனிப் பூச்சியைத் தீப
தருவித்து வைத்ததைப்போல் [மென
சங்கமர் தமக்குமுன் னேதோ நா னுளறிய
சர்வகுற்றமும் பொருப்பீர்
சிட்சைபா வம்போக்கும் காவேரியநுமநதி
சேர்பவள நத்தமேட்டில்
திருவேங்கை மானகரி லுறையங்காளம்ம
தேவியருளானந்தியே. [னே

சுபம்! சுபம்!! சுபம்!!!

## அவையடக்கம்

முன்னூலை யறிய நாதன் முறைதனையறியநின்
[னும்
நன்னூலையறியநீதி நயங்களு மறிந்திலென்மற்
றென்னூலு மறியன்பாரி லீசன்பாலாசைசெய்தி
யின்னூலை யுளரலானே னிதன்பிழை பொருப்பர்
மேலோர்.

# சோளீஸ்வரன் பதிகம்.

## விநாயகர் துதி.

சொல்லிய வேதநாலிற் றுலங்கிடு மரியனுன
நெல்லியின் கனியையொற்று நிகழ்ந்திடுமுதியனுன
மல்லியி னிறத்தன் சோளீஸ் வரன்றசம்பாட ஞான
வல்லியீன் றெடுத்த வெள்ளை வாரணமுகன் றுள்காப்பு.

1 தென்னைகமுகீந்துகொய்யாவெலுமிச்சையுஞ்
செவ்வாழையொடு பலாவும்
சிறுநெல்லி மாதுளை மாமரச் சோலையோடு
திகழுமலர் வகைகள் சொல்வேன்
பொன்னையொற்றிடுஞ் சில விண்ணையொற்
புகழ்பவள நிறமனந்தம் [றிடும்
புதுமையிது வெனயாரும் மிதமிலாதுரைத்
பூஞ்சோலையாகுமலவோ [திடும்
பின்னையு மஞ்சள்நெற் கரும்பலங்காரமும்
பேசவரிதான வளஞ்சூழ்
பெரிதான விச்சேத்தி ரந்தனைகைதொழுவர்
பீளைமுழு தகன்றுபுவியில்
மன்னியே வாழ்வரிதி லையமில்லையனுமநதி
மல்குகா விரிசூழ்ந்திடும்
மாவேங்கை நன்னகர் வாசனே மெய்யன்பர்
மனதிலுறை சோளீசனே.

2 கொன்றையொடு திங்களணி கின்றசிவசம்பு
கூறுமெஞ் ஞானவடிவே [வே

குமரனையீன்றரு ளமரனே யதிபனே
கொடியதாருகர் விடுத்த
கன்றையணி யீசனெ தொண்டர்பணிநேச
காமனையெரித்தபரனே [னே
காளைமீ துற்றவா நீலம்புசித்தவா
கரத்திலெரிதனை வைத்தவா
தென்றிசையோன்றனை யன்றுதைத்தே
தேசிகா கைலைவாசா [கொன்ற
திருமாதங்கைக்காக ஒருகாதனைத் தூக்கித்
திக்கெங்கு மதிரவதிர
மன்றுளாடியதேவ னேயனுமநதி
மல்குகா விரி சூழ்ந்திடும்
மாவேங்கை நகர்மேவும் வாசனே மெய்யன்
மனதிலுறை சோளீசனே. [பர்

3 அஞ்சினோர் தங்களுக் காதாரமுனையன்றி
யவனியில் வேறுமுளதோ
அவ்விதமிருக்கநீ யெனைக்கைவிடல்நீதி
யாகுமோ வையனேயென்
நெஞ்சுருக நினைவுருக மெய்யுருகவுருகவென்
நிலையுருக வறிவுமுருக
நிதமு மிவ்விதமா யலைந்திவ்வுலகினில்
நின்றவடியேன் றன்மீது
வஞ்சம்வைத் தேயின்னும் வாராதிருப்பது
வசையுனக் காகுமலவோ

மஞ்சாடு மலையரசி பாகனே யனுமநதி
மல்குகா விரிசூழ்ந்திடும்
மாவேங்கை நகர்மேவும் வாசனேமெய்யன்பர்
மனதிலுறை சோளீசனே

4 கானல்தனை நீரென்று கருதியலைகின் றமான்
கன்றுபோல் யானுமிந்தக்
கன்மவிருடன்னைமெய் யென்றறிவிலாமலே
காலம் கழித்தனல்லால்
ஆனநின் பதமெய்யென் றறிந்திலேன்பொல்
வாக்கைசத மென்றிருந்தேன் [லாத
ஆகமமுறைசிறிது ம றிகிலேனென்னைப்போல
வாண்பெணி லொருவருளரோ
ஈனவறிவாள னெனவே யாருங்கூறிட
யெனையிப் புவியதனிலே
ஏன்படைத்தாய் சொல்லு யெனையீன்றவண்
யேங்கியான் வாடநன்றோ [ணலே
மானசமாகவந் துதவுவாய் யனுமநதி
மல்குகா விரிசூழ்ந்திடும்
மாவேங்கை நன்னகர் வாசனேமெய்யன்பர்
மல்குகா விரிசூழ்ந்திடும்
மாவேங்கை நன்னகர் வாசனே மெய்யன்பர்
மனதிலுறை சோளீசனே.

5 பிரமனென்னைச் சிருஷ்ட்டித் திருகைநொந்து
பெரும்பா டடைந்திடாமல்

பிணியுற்ற வெனைத்தாய் சுமந்தலேயாமலே
பின்னுமெம தூதரென்மேல்
வர்மம்வைத் தேபாசம் வீசிச்சலிக்காது
வான்புகையாகமலும்
வாகானபிருதிவி தணலேரிடாமலும்
வரமளிக்கா திருத்தல்
தர்மமா வீதுமக் கேளிதமல்லவோ
தயைசற்று மிலேயோவெந்தன்
தந்தைநீ யல்லேவோ மைந்தனனல்லவோ
தமியன்மேல் வஞ்சம்வைத்து
மர்மமாயிருத்தலீ தழகல்லவநுமநதி
மல்குகா விரிசூழ்ந்திடும்
மாவேங்கை நன்னகர் வாசனே மெய்யன்பர்
மனதிலுறை சோளீசனே.

6 சந்ததமு முனேயிடைவி டாதுதுதி செய்கின்ற
சர்ஜனர்க ளுறவுவேண்டும்
சாரமில்லாதசம்சார சாகரமென்னே
சாராதிருத்தல் வேண்டும்
சிந்தையது வுனேயன்றி வேறுநினேவாகாத
செய்கையது வேண்டுமென்பால்
சீவகாருண்ய மில்லாதபாதகவஞ்சர்
சேர்க்கையில்லாது வேண்டும்
அந்தமதிலாதநின் னரியநற்பெருமையை
யளவின்றி யோதவேண்டும்

அருள்வேண்டுமா ஞானப் பொருள்வேண்டு
வானந்த மதிகம்வேண்டும் [மாசற்ற
மைந்தனெனையாள நீவரவேண்டு மநுமநதி
மல்கு காவிரி சூழ்ந்திடும
மாவேங்கை நன்னகர் வாசனே மெய்யன்பர்
மனதிலுறை சோளீசனே.

7 நிந்தனை பெருமுலக பந்தமறவே யதனை
நிர் தூளியாக வுன்றன்
நினைவாகி யரியநல் லுணர்வாகி மேலான
நின்றிருக் கோவிலேகி
வந்தனை செய்தஷ்டாங்க பஞ்சாங்க சாஷ்
வரிசைக்கிரமமாக [டாங்க
வழிபாடுசெய்துபணிசெய்துதுதிசெய்துமலர்
வாகுடன் கொய்துசூட
நந்தவனங்களை விந்தையா யமைத்தருகில்
நற்றீர்த்தமதை யமைத்தும்
நல்லாவின் கோமயத்தாற் கோவில்மெழு
நன்னயக் கோலமிட்டும் [கியும்
மந்தமற்றோர் பாடி யேற்றுநல் லநுமநதி
மல்குகா விரிசூழ்ந்திடும்
மாவேங்கை நன்னகர் வாசனே மெய்யன்பர்
மனதிலுறை சோளீசனே

8 பூதசுத்தியுமுதலா யசுத்திகளைந்தும்
பொருந்தவே முடிந்தபின்னர்

புகழான தூபதீபாதிதிரு மஞ்சனம்
புகைவாசமதை யமைத்தும்
நீதியுடனுசனந் தனையமைத் ததன்மீது
நின்னைமிகவே யமைத்தும்
நேராகவேயுனை மாருது சிந்தையில்
நினைந்தன் புருகிமேலும்
சீதளமதானவபி ஷேகாதி செய்துமலர்
சிறப்பாக வலங்கரித்து
சிறுசம்பா வமுதுடன் சீனிதே னெய்பாலும்
சீராகவே படைத்து
மாதயையுடன் பணிவர் நீராடுமநுமநதி
மல்குகா விரிசூழ்ந்திடும்
மாவேங்கை நன்னகர் வாசனே மெய்யன்பர்
மனதிலுறை சோளீசனே.

9 இயமமொடு நியமாதிகளைமுடித் தேகாந்த
விருட்டறை தனையடைந்து
இதமுடன் வாக்காதி சப்தாதியானதச
விந்திரியந்தனை யொடுக்கி
நயமான ரேசக பூரக மிரண்டையும்
நடுவான நிலையிலேற்றி
நவவாயிலும் செல்ல வோடாமற கும்பித்து
நகராதி யெழுத்தறிந்து
அயன்மாலரன்மகேஸ் வரன்சதாசிவமொடு
வாதாரங்களை யறிந்து

அக்கினியை மூலத்தி லேசொலிப்பித்துருகு
மமிர் துண்டு சோதியான
மயத்திருந்தோர்கள் தின நீராடுமநுமநதி
மல்குகா விரிசூழ்ந்திடும்
மாவேங்கை நன்னகர் வாசனே மெய்யன்பர்
மனதிலுறை சோளீசனே.

10 வேதசாஸ்திரபுரா ணாதிகலைஞானமும்
விரிவா யுணர்ந்துமேலும்
விதவிதமானசம யாதிநூல்தன்னையும்
விரும்பியே கற் றுணர்ந்து
பேதமாயுள்ளபுறச் சமயங்கள் யாவையும்
பிதற்றென் று தள்ளியதனை
பேராது பூர்வபட் சம்செய்து மேலான
பெருமையுற் றறியஞான
மூதறிவினுற்பதி பசுபாசமறிந்துமு
மூட்ச்சுத்துவம் விரும்பி
மூவிதம்மானதிரி புடிபொருந்தாவண்ணம்
முத்திசாதனம் படைத்த
மாதவர்கணீராடு நீதியுள்ளநுமநதி
மல்குகா விரிசூழ்ந்திடும்
மாவேங்கை நன்னகர் வாசனே மெய்யன்பர்
மனதிலுறை சோளீசனே.

சுபம்! சுபம்! சுபம்!

வெங்கம்பூர்,

**P. ரெணசிங்கராயக் கவுண்டர்**

முயற்சியால்

துக்காச்சி,

**நா. நாராயண செட்டியார், அவர்களால்**

இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டது

1938-ல்

ஊஞ்சலூர். மளிகை

**U. S. சுந்தரம்,**

முயற்சியால்

ஈரோடு. கொங்கலம்மன் வீதி.

ஆயிரவர் நகர வைசியர் இளைஞர்

மன்றத்தின் உதவியால்

மூன்றும் பதிப்பாக வெளிடப்பட்டது

1968-ல்.

திருமகள் அச்சகம், கொடுமுடி.